**16.09.2025**

**அ.வ.எண். 820/2017**

**வா.சா.1 - துரைராஜ், த/பெ. கே.எஸ்.கந்தசாமி**

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 16.09.2025 is accordance with the provision of Act X of 3331

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. காலை எண்.310/2 உள்ள சொத்து எனக்கு பூர்வீகமாக சொந்தமானது என்றால் சரியல்ல. 310/2 சொத்தானது எனக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் காலை எண்.310/2 ன் வழியாக வழித்தடம் செல்வதாக சொல்லியுள்ளேன். காலை எண்.310/1 ல் சென்னிமலை ஆண்டவர் கோவில் அமைந்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையாளர் அறிக்கையில் சென்னிமலை ஆண்டவர் கோவில் காலை எண்.310/1 மற்றும் காலை எண்.310/2 ல் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் கோவில் காலை எண்.310/1 ல் உள்ளது, காலியிடம் காலை எண்.310/2 ல் உள்ளது.

2. எனக்கு நன்றாக படிக்க தெரியும், கலர்களின் அடையாளம் குறித்தும் நன்கு தெரியும். அடர் பச்சை நிறத்தில் சென்னிஆண்டவர் கோவில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். காலை எண்.310/1 ல் சாமி பிரகாரங்கள் உள்ளது, காலை எண்.310/2 ல் காலியிடம் உள்ளது. நான் நீதிமன்ற ஆணையாளர் அறிவிப்புக்கு எவ்வித மறுப்பும் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. நீதிமனற ஆணையாளர் அறிக்கையின் அடிப்படையில் எனது வழக்கை நிரூபிப்பதாக கூறி சத்திய பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

3. நான் நீதிமன்ற ஆணையாளர் புல எண்.310/1, 310/2, 310/3, 316 நிலங்களை பார்வையிட்டு நில அளவை செய்ய வேண்டும் என, எனது மனுவில் கோரியுள்ளேன். 1ம் அயிட்ட சொத்தின் 316/2 A என்றும், 2ம் அயிட்ட சொத்தின் புல எண்.310/2 என்றும், 3ம் அயிட்ட சொத்து புல எண்.310/3 என்று சொன்னால் சரிதான். புல எண்.310/1 காலையில் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தில் நான் வண்டித்தடம் செல்வதாக கூறி வழக்கு சொத்து விவரத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்,

பிரதிவாதி  எல்லையை ஒட்டி தடம் செல்கிறது. வழக்குரையில், சென்னிமலை ஆண்டவர் கோவிலுக்கு 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட பூமியில் தான் தடம் செல்கிறது என்றும், அந்த தடத்தை பயன்படுத்தும் அதிகாரம் வாதிகளுக்கு உள்ளது என்று விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 1ம் பிரதிவாதியின் எல்லை வழியாக தடம் செல்வதாக சொல்லியுள்ளேன்.

4. எனது பிராதில் எந்த இடத்தில் 1ம் பிரதிவாதியின் எல்லை வழியாக தடம் செல்வதாக சொல்லியுள்ளேன் என்றால் குறிப்பிட்டு சொல்லவில்லை. 1ம் பிரதிவாதியின் இடத்தின் வழியாக செல்லவில்லை, 1ம் பிரதிவாதியின் எல்லை வழியாக செல்கிறது.

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வேண்டுகோளின் படி ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur